**அரசுத் தேர்வுகள் இயக்ககம் – சென்னை– 6.**

**மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத்தேர்வு மார்ச்/ஏப்ரல் – 2023**

**பொதுத் தமிழ் – விடைக்குறிப்புகள்.**

**விடைத்தாள் மதிப்பிடும்போது கீழ்க்குறிப்பிட்டுள்ள வழிமுறைகளைத் தவறாது பின்பற்றுதல் வேண்டும்.**

1. **நீலம் மற்றும் கருப்பு** மையினால் எழுதப்பட்டுள்ள விடைகள் மட்டுமே மதிப்பீடு செய்யப்பட வேண்டும்.

2. விடைகள் சொந்த நடையில் தெளிவாக அமைந்து தொடர் பிழை, சொற்பிழை, எழுத்துப்பிழை, ஒற்றுப்பிழை, இலக்கணப்பிழை இன்றி இருப்பின் முழு மதிப்பெண் வழங்குதல் வேண்டும்.

3. எழுத்துப்பிழை, ஒற்றுப்பிழை, இலக்கணப்பிழை ஒவ்வொன்றிற்கும் கால் மதிப்பெண் வீதம் குறைத்து அவ்வாறு குறைக்கும் மதிப்பெண்கள் எக்காரணம் கொண்டும் வினாவிற்குரிய மதிப்பெண்ணில் நான்கில் ஒரு பங்கிற்கு மேல் மிகாமல் இருத்தல் வேண்டும்.

www.Padasalai.Net

4. தவறான விடைகளைக் (X) குறியிட்டும் தொடர் பிழைகளை அடிக்கோடிட்டும் ஒற்றுப்பிழைகளைக் (^) குறியிட்டுக் காட்டியும் விதிப்படி அவற்றிற்குரிய மதிப்பெண்களைக் குறைத்தல் வேண்டும்.

5. மதிப்பெண் வழங்கப்படுகின்ற ஒவ்வொரு சரியான கருத்திற்கும் தனித்தனியே ✓ குறியிடுதல் வேண்டும்.

6. மிகையாக விடை இருப்பின் **"மிகை"** என்று குறிப்பிட்டு அடித்தல் வேண்டும்.

7. ஒரே விடை மீண்டும் எழுதப்பட்டிருப்பின் **"மீண்டும்"** என்று குறிப்பிட்டு அடித்தல் வேண்டும்.

8. கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவேண்டும். இல்லையெனில் மதிப்பெண் வழங்குதல் கூடாது.

9. வினா எண் குறிப்பிடாத விடைகளுக்கு மதிப்பெண்கள் வழங்குதல் கூடாது.

## பகுதி–I

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** **14×1=14**

| | | | |
|---|---|---|---|
| 1. | ஈ | பனுவல் | 1 |
| 2. | ஈ | அண்ணாமலையார் | 1 |
| 3. | ஈ | இவை மூன்றும் | 1 |
| 4. | இ | பகுதி, விகுதி | 1 |
| 5. | அ | 27 | 1 |
| 6. | ஆ | நிரையொன்றாசிரியத்தளை | 1 |
| 7. | ஆ | சாழல் | 1 |
| 8. | அ | அமைச்சர் மன்னரிடம் | 1 |
| 9. | இ | ஆசிரியர் | 1 |
| 10. | ஈ | மனோன்மணீயம் | 1 |
| 11. | இ | பிறருடன் ஒத்துப்போகாதவன், தன் வலிமை அறியாதவன்,தன்னை உயர்வாக நினைப்பவன் | 1 |
| 12. | ஈ | தண்டை | 1 |
| 13. | ஆ | இளையராஜா | 1 |
| 14. | அ | 1 –(iii), 2–(iv), 3–(ii), 4–(i) | 1 |

www.Padasalai.Net

## பகுதி–II

**பிரிவு – 1** **எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** **3×2=6**

| | | |
|---|---|---|
| 15 | **இரசூல் கம்சதோவ் பார்வை**<br>தன் இனத்தையும் மொழியையும் பாடாத கவிதை<br>வேரில்லாத மரம், கூடில்லாத பறவை. | 2 |
| 16 | **சீர்தூக்கி ஆராய வேண்டிய ஆற்றல்கள்**<br>i) செயலின் வலிமை<br>ii) தன்வலிமை<br>iii) பகைவன் வலிமை<br>iv) துணையாளர் வலிமை | 2 |
| 17 | **எண்ணச் சொல்கிறவர்கள் :** ஆசிரியர்கள்<br>**எண்ணுபவர்கள்** : மாணவர்கள் | 1<br>1 |
| 18 | **செந்தூக்கு**<br>செந்தூக்கு என்பது வஞ்சிப்பாவின் இறுதியடி போன்றோ, ஆசிரியவடியின் இறுதி போன்றோ அமையும். | 2 |


Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

பிரிவு – 2 எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2×2=4

| | | |
|---|---|---|
| 19 | **தமிழ்நாட்டின் மாநில மரம்**<br>➢ தமிழ்நாட்டின் மாநில மரம் பனைமரம்.<br>➢ ஏழைகளின் கற்பக விருட்சம்.<br>➢ சிறந்த காற்றுத் தடுப்பான்.<br>➢ நிலத்தடி நீரைச் சேமித்து வைக்கும் பண்புடையது.<br>➢ பனைவளர அதிக தண்ணீர் தேவையில்லை.<br>➢ நுங்கு, பதநீர் கிடைக்கின்றன.<br>➢ மதிப்புக்கூட்டுப்பொருள்கள் – கருப்பட்டி, பனங்கற்கண்டு<br>**(ஏதேனும் நான்கு கருத்துகள் எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)** | 2 |
| 20 | **நாட்டுப்புறத்திலும் பட்டணத்திலும் சிறந்து விளங்குவன**<br>➢ நாட்டுப்புறத்தில் எல்லாவற்றையும் விழுங்கவல்ல இயற்கையே சிறந்து விளங்குகிறது.<br>➢ பட்டணத்தில் மனித சமுதாயம்தான் மிகவும் முக்கியமானதாகத் தலைதூக்கி நிற்கிறது. | 1<br>1 |
| 21 | **இந்திய கட்டடக்கலையின் மூன்று வகைகள்**<br>நாகரம், வேசரம், திராவிடம். | 2 |

பிரிவு – 3 எவையேனும் ஏழனுக்கு விடை தருக. 7×2=14

| | | |
|---|---|---|
| 22 | **உயிரீறு :** நிலைமொழியின் இறுதி எழுத்து உயிர் எனில் அது ‘உயிரீறு’.<br>(எ.கா) மணி (ண்+இ) + மாலை = மணிமாலை<br>**மெய்யீறு :** நிலைமொழியின் இறுதி எழுத்து மெய்யாக இருந்தால் அது ‘மெய்யீறு’.<br>(எ.கா) பொன் + வண்டு = பொன்வண்டு<br>**(பொருத்தமான சான்று இருப்பின் மதிப்பெண் வழங்கலாம்)** | 1<br>1 |
| 23 | **ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.**<br>அ) அலர்ந்து = அலர் + த்(ந்) + த் + உ<br>அலர் = பகுதி<br>த் = சந்தி ந் ஆனது விகாரம்<br>த் = இறந்தகால இடைநிலை<br>உ = வினையெச்ச விகுதி | 1<br>1 |
| | ஆ) நெருங்கின = நெருங்கு + (இ) ன் + அ<br>நெருங்கு = பகுதி<br>(இ)ன் = இறந்தகால இடைநிலை<br>அ = பெயரெச்ச விகுதி<br>**(பிரித்து எழுதியிருப்பின் 1 மதிப்பெண், உறுப்பிலக்கணம் 1 மதிப்பெண்)** | 1<br>1 |
| 24 | **ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக :**<br>அ) இழுக்கின்றி – இழுக்கு + இன்றி<br>**விதி – 1 உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்**<br>**விதி – 2 உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே** | 1<br>1 |
| | ஆ) திருப்புகழ் – திரு + புகழ்<br>**விதி – இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்**<br>**(பிரித்து எழுதியிருப்பின் 1 மதிப்பெண், விதி 1 மதிப்பெண்)** | 1<br>1 |

www.Padasalai.Net



Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

| | | |
|---|---|---|
| 25 | **மரபுப் பிழையை நீக்கி எழுதுக.**<br>அ) பழம் **தின்று** பால் **பருகினான்.**<br>ஆ) காகம் **கரைய** மயில் **அகவியது** | 1<br>1 |
| 26 | **மயங்கொலிச் சொற்களின் பொருளறிந்து ஒரே தொடரில் அமைத்து எழுதுக.**<br>உலை, உளை, உழை<br>வீட்டில் **உலை** கொதிக்கவும் மன **உளைச்சல்** தீரவும் **உழைக்க** வேண்டும்.<br>**(பொருத்தமான தொடர் எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)** | 2 |
| 27 | **தேவையான இடங்களில் வல்லின மெய்களை இட்டு எழுதுக.**<br>அ) தாமரைத் தடாகத்தில் மீன்கள் துள்ளிப் பாய்ந்தது.<br>ஆ) ஆண்களைப் போலவே பெண்களும் அரசுப் பணியைப் பெற வேண்டும். | 1<br>1 |
| 28 | **கலைச்சொல்லாக்கம்**<br>பொருள் தெரிந்த பிறமொழிச் சொற்களுக்குத் தாய்மொழியில் முன்பே உள்ள சொற்களை அடையாளம் காட்டியும் தேவையானவிடத்துப் புதிதாகச் சொற்களை உருவாக்கியும் தருவதாகும். | 2 |
| 29 | **தொடரில் உள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி இரண்டு சொற்றொடர்களாக்குக.**<br>அ) மயில் ஓர் அழகான பறவை.<br>ஆ) பயிர் வளரத் தண்ணீர் வேண்டும். | 1<br>1 |
| 30 | **சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க.**<br>**கால்நடை – கால்நடைகளை** மேய்ச்சல் நிலத்திற்கு ஓட்டிக்கொண்டு போனார்கள்.<br>**கால் நடை –** சிறிய தொலைவைக் கடக்க **கால் நடை**யாகச் செல்வது உடலுக்கு நலம் பயக்கும்.<br>**(அல்லது)** | 1<br>1 |
| | **பிண்ணாக்கு**– மாடுகள் **பிண்ணாக்குக்** கலந்த தண்ணீரை விரும்பிக் குடிக்கும்.<br>**பிள் நாக்கு –** பாம்புகள் **பிள் நாக்கு** உடையவை.<br>**(பொருத்தமான ஒரே தொடரில் எழுதியிருப்பினும் முழு மதிப்பெண் வழங்கலாம்)** | 1<br>1 |

www.Padasalai.Net

**பகுதி–III பிரிவு – 1**

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2×4=8**

| | | |
|---|---|---|
| 31 | **சு.வில்வரத்தினம் பாடத்தான் வேண்டும் எனக் குறிப்பிடுவன.**<br>➢ தமிழ் அன்னையைத் தொழுதவர், உழுதவர், விதைத்தவர், உழைத்து வியர்த்தவர்க்கெல்லாம் நிறைவான செல்வம் தந்து மகிழ்ந்தவள்.<br>➢ காற்றிலே ஏறி, கடலை, நெருப்பாற்றினை, மலை உச்சிகளைக் கடந்துசெல் எனக் கூறியவுடன் செல்லுகின்ற ஓர் பாடலைக் கபாடபுரங்களைப் பலி கொண்ட பின்னரும், காலத்தால் அழியாத தொன்மையான கனிமங்களின் வலிமையெல்லாம் சேரப்பாடத்தான் வேண்டும்.<br>➢ இத்தகைய தமிழன்னைக்குப் பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு பாடத்தான் வேண்டும். | 4 |


Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

| | | |
|---|---|---|
| 32 | **சலச வாவியில் செங்கயல் பாயும்**<br>**இடம் –** பெரியவன் கவிராயர் எழுதிய 'திருமலை முருகன் பள்ளு'வில் இடம் பெற்றுள்ளது.<br>**பொருள்–** தாமரைத் தடாகத்தில் மீன்கள் துள்ளிப் பாய்ந்து விளையாடும்.<br>**விளக்கம் –** வடகரை நாட்டில் மலரில் மொய்க்கும் வண்டுகள் 'இந்தளம்' என்ற பண்ணைப் பாடும். மீனைப் பிடிப்பதற்காக வந்த உள்ளான் பறவை வண்டுகளின் இசையில் மயங்கி அமர்ந்திருக்கும். அதனால் தாமரைத் தடாகத்தில் மீன்கள் அச்சமின்றித் துள்ளிப் பாய்ந்து விளையாடுகிறது. | 1<br>1<br>2 |
| 33 | **விரும்பியதை அடையும் வழி**<br>➢ செய்ய முடிந்த தவத்தை முயன்று பார்த்தால் விரும்பியதை விரும்பியவாறே பெறமுடியும்.<br>➢ உரிய கருவிகளுடன் தக்க காலம் அறிந்து செய்தால் அரிய செயல் என்று ஒன்று இல்லை.<br>➢ உரிய காலத்தில், பொருத்தமான இடத்தில், ஒரு செயலைச் செய்தால் உலகத்தையே பெறக் கருதினாலும் கிடைத்துவிடும்.<br>➢ உலகத்தை வெல்லக் கருதுபவர், கலங்காமல் உரிய காலத்துக்குக் காத்திருப்பர்.<br>➢ கிடைப்பதற்கு அரிய காலம் வாய்த்தால் அப்போதே முடிப்பதற்கு அரிய செயலைச் செய்து முடிக்க வேண்டும்.<br>**(எவையேனும் நான்கு கருத்துகள் எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)** | 4 |
| 34 | **சேரநாடு செல்வ வளம் மிக்கது**<br>➢ சேரநாட்டு மக்கள் பசி, பிணி அறியாதவர்கள்.<br>➢ வேறு நாட்டுக்குச் செல்லாமல், தன்சுற்றத்தாரோடு வாழ<br>➢ விரும்புகிறவர்கள்.<br>➢ நாட்டையும் மக்களையும் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் கண்ணெனக் காத்தான். விழாக்கள் அதிகம் நிகழும் நாட்டை உடையவன்.<br>➢ உலகில் வாழும் அனைத்து உயிர்களுக்கும் கொடுக்கும் பண்புடையவன்.<br>➢ புதுவருவாய்ப் பெருக்கமும் ஈகையால் வரும் இன்பமும் உடையவன்.<br>**(எவையேனும் நான்கு கருத்துகள் எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)** | 4 |

www.Padasalai.Net

**<u>பிரிவு – 2</u>**

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2×4=8**

| | | |
|---|---|---|
| 35 | **வேதிக் கலப்பில்லாத பூச்சிக்கொல்லி**<br>➢ வேதிக் கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமே.<br>➢ வேதியியல் பூச்சிக்கொல்லியைப் பயன்படுத்துவதால் புற்றுநோய், வயிற்றுப்புண், மலட்டுத்தன்மை போன்ற நோய்கள் ஏற்படுகின்றன.<br>➢ நம் முன்னோர்கள் வேதியியல் பூச்சிக்கொல்லியைப் பயன்படுத்தவில்லை.<br>➢ வேப்பங்கொட்டை, நொச்சி இலை, புங்கன், பிரண்டை, கற்றாழை | 4 |


Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

| | | |
|---|---|---|
| | ஆகியவற்றை நன்றாக இடித்துக் கோமியத்தில் ஊற வைத்துத் தெளித்தால் பூச்சிகள் இல்லாமல் போய்விடும்.<br>➢ நுண்ணுயிர்ப் பெருக்கம் ஏற்பட்டு, மண்வளம் காக்கப்படும்.<br>**(எவையேனும் நான்கு கருத்துகள் எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)** | |
| 36 | **சமணப்பள்ளி :**<br>➢ கல்வி, மருந்து, உணவு, அடைக்கலம் ஆகிய கொடைகள் சமணத்தின் தலையாய அறங்கள்.<br>➢ சமணத் துறவிகள் மலைக்குகையில் தங்கி கல்வியையும், சமயக்கருத்துகளையும் மாணவர்களுக்குப் போதித்தனர்.<br>➢ 'பள்ளி' என்ற சொல்லுக்குப் 'படுக்கை' என்று பொருள். சமணப் படுக்கைகள் பற்றித் திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டையிலும், கழுகுமலையிலும் உள்ள கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன.<br>**(எவையேனும் இரண்டு கருத்துகள் எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)**<br>**பெண்கல்வி :**<br>➢ வந்தவாசி அருகில் வேடல் என்னும் ஊரில் சமணப்பெண் ஆசிரியர் 500 மாணவர்களுக்குக் கல்வி கற்பித்தார்.<br>➢ பட்டினிக்குரத்தி என்ற சமணப்பெண் ஆசிரியர் விளாப்பாக்கத்தில் சமணப்பள்ளி ஒன்றை நிறுவினார்.<br>➢ பெண்களுக்கான சமணப்பள்ளிகள் 'பெண் பள்ளிகள்' என்று அழைக்கப்பட்டன.<br>**(எவையேனும் இரண்டு கருத்துகள் எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)** | 2<br>2 |
| 37 | **ஆனந்தரங்கரின் நாட்குறிப்பு வெளிப்படுத்தும் சமுதாயச் செய்திகள்**<br>➢ ஆனந்தரங்கரின் நாட்குறிப்பு 18 ஆம் நூற்றாண்டின் தமிழ்ச்சமூகத்தைப் படம் பிடித்துக்காட்டுகின்றது.<br>➢ பண்பாடு, சமயம், சாதி, நீதி, வணிகம், நம்பிக்கைகள் முதலான பல்வேறு கூறுகள்அடங்கிய நிகழ்வுகளைப் பதிவு செய்துள்ளார்.<br>➢ நீதி வழங்குதல், தண்டனை அளித்தல், தண்டம் கட்டுதல் முதலிய செய்திகளை நாட்குறிப்பில் பதிவு செய்துள்ளார்.<br>➢ கப்பல் போக்குவரத்தைப் பற்றி எழுதியுள்ளார்.<br>➢ பல்வேறு வராகன்களைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.<br>**(எவையேனும் நான்கு கருத்துகள் எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)** | 4 |
| 38 | **ஃபிரெஸ்கோ ஓவியங்கள் :**<br>➢ ஃபிரெஸ்கோ என்ற இத்தாலிச் சொல்லுக்குப் 'புதுமை' என்று பொருள்<br>➢ சுண்ணாம்புக் காரைப்பூச்சு மீது ஈரம் காயும்முன் வரையப்படும் பழமையான ஓவியக்கலை நுட்பம்.<br>➢ இவ்வகை ஓவியங்களை அஜந்தா, எல்லோரா, சித்தன்னவாசலில் காணலாம். | 2 |

www.Padasalai.Net



Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

| | | |
|---|---|---|
| | **கற்றளிக் கோயில்கள் :**<br>➢ செங்கற்களை அடுக்கிக் கட்டுவது போல கருங்கற்களை அடுக்கிக் கட்டுவது கற்றளி எனப்படும்.<br>➢ ஏழாம் நூற்றாண்டில் இரண்டாம் நரசிம்மவர்மன் உருவாக்கிய வடிவம் இது.<br>➢ மகாபலிபுரம் கடற்கரைக் கோவில், காஞ்சிபுரம் கைலாசநாதர் கோவில், பனமலைக்கோவில் இவற்றிற்கான சான்றுகள்.<br>➢ முழுமையாகக் கற்களைக் கொண்டே கட்டப்பட்ட மிகப்பெரிய கோவில் தஞ்சைப் பெரியகோவில் ஆகும். | 2 |

பிரிவு – 3

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** **3×4=12**

| | | |
|---|---|---|
| 39 | **சொல் பின்வருநிலையணி :**<br>**அணிவிளக்கம் :** செய்யுளில் முன்னர் வந்த சொல் மீண்டும் மீண்டும் வந்து வெவ்வேறு பொருளைத் தருவது சொல் பின்வருநிலையணி ஆகும்.<br>**சான்று :** பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்<br>பற்றுக பற்று விடற்கு<br>**சான்று விளக்கம் :**<br>பற்றுகளை அகற்றுவதற்காகப் பற்று இல்லாதவனைப் பற்றி நிற்க வேண்டும்.<br>**பொருத்தம் :**<br>'பற்று' என்னும் ஒரே சொல் பற்றிக் கொள்ளுதல், விருப்பம், பாதம் எனப் பல்வேறு பொருள்களில் வந்துள்ளது. எனவே, இது சொல் பின்வருநிலையணி ஆகும்.<br>**(பொருத்தமான வேறு சான்று இருப்பின் உரிய மதிப்பெண் வழங்கலாம்)** | 2<br>1<br>1 |
| | (அல்லது) | |
| | தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே<br>நாவினால் சுட்ட வடு.<br>**அணி சுட்டல் –** இக்குறட்பாவில் பயின்று வந்துள்ள அணி வேற்றுமையணி ஆகும்.<br>**அணி விளக்கம் :**<br>செய்யுளில் இரண்டு பொருள்களுக்கு இடையே உள்ள ஒற்றுமையைக் கூறி, ஒன்றினை மட்டும் வேறுபடுத்திக் கூறுவது வேற்றுமையணி ஆகும்.<br>**சான்று விளக்கம் :**<br>தீயினால் ஏற்பட்ட புண் எளிதில் ஆறிவிடும். ஒருவர் நாவினால் சுட்ட வடு என்றும் மறையாது.<br>**பொருத்தம் :**<br>தீயும், தீச்சொல்லும் சுடும் தன்மை உடையன. ஆனால் தீச்சொல் என்றும் மறையாத வடுவாக இருக்கும் என வேறுபடுத்திக் காட்டுவதால் இது வேற்றுமையணிக்குப் பொருத்தமாயிற்று. | 1<br>2<br>1 |
| 40 | **இலக்கிய நயம் பாராட்டுக.**<br>**மையக்கருத்து :** வேற்றுமைகளை மறந்து அனைவரும் ஒரு குடும்பமாய் வாழ்ந்து ஒற்றுமை ஓங்கிடச் செய்திடுவோம் என்று வலியுறுத்துகிறார். | 1 |

www.Padasalai.Net



Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

| | | |
|---|---|---|
| | **மோனை:**<br>பிரிவுகள் – பேதைமை<br>ஒருதனி – ஒற்றுமை<br>**எதுகை:**<br>பிரிவுகள் – ஒருதனி<br>**இயைபு:**<br>விளைந்தனவே – விரிந்தனவே<br>போயொழிக – நலமுறுக<br>வாழ்ந்திடுவோம் – செய்திடுவோம்<br>**முரண்:**<br>இன்னல், போயொழிக × நலமுறுக<br>பிரிவுகள் × ஒற்றுமை<br>**அணிநயம் :** இயல்பு நவிற்சி அணி<br>**சந்தநயம் :** சிந்துப்பா<br>**(மையக்கருத்துடன் எவையேனும் மூன்று ஏற்புடைய நயங்கள் எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்கலாம்)** | 3 |
| 41 | **பழமொழியை வாழ்க்கை நிகழ்வோடு தொடர்புபடுத்தி எழுதுக.**<br>அ) வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்.<br>**(அல்லது)**<br>ஆ) அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.<br>**பழமொழி விளக்கம்**<br>**வாழ்க்கை நிகழ்வு (கதை)** | 1<br>3 |
| 42 | **வா** என்ற **வேர்ச்சொல்லை**– வினைமுற்று, வினையெச்சம், பெயரெச்சம், வினையாலணையும் பெயராக மாற்றித் தொடரில் அமைத்து எழுதுக.<br>**வா – வேர்ச்சொல்**<br>அருணா வீட்டுக்கு **வந்தாள் (வினைமுற்று)**<br>அங்கு **வந்த** பேருந்தில் அனைவரும் ஏறினர் **(பெயரெச்சம்)**<br>கருணாகரன் மேடையில் **வந்து** நின்றார் **(வினையெச்சம்)**<br>என்னைப் பார்க்க **வந்தவர்** என் தந்தையின் நண்பர் **(வினையாலணையும் பெயர்)**<br>**(பொருத்தமான வேறு சான்றுகள் இருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)** | 1<br>1<br>1<br>1 |
| 43 | **தமிழாக்கம் தருக.**<br>➢ கலாச்சாரம் மக்களை உருவாக்குவதில்லை; மக்களே கலாச்சாரத்தை உருவாக்குகிறார்கள்.<br>➢ நீ இந்த உலகத்தை மாற்ற விரும்பினால், நீ முதலில் உன்னை மாற்றிக் கொள்ள வேண்டும்.<br>➢ கல்வி வலிமையான ஆயுதம். அதைக் கொண்டு உலகை மாற்றலாம்.<br>➢ உலகத்தில் உள்ள இயற்கை அழகை ரசிப்பது மனதைத் தூய்மைப்படுத்துவதற்கான முதல் படியாகும்.<br>**(அல்லது)**<br>**செவி மாற்றுத்திறனாளர்களுக்கான மாற்று வினா**<br>1) ஆபிரகாம் பண்டிதர்<br>2) புகைப்படக் கலை, அச்சுக்கலை, சோதிடம், மருத்துவம், இசைக்கலை.<br>3) சங்கீத வித்யா மகாஜன சங்கம்<br>4) கருணாமிர்த சாகரம் | 1<br>1<br>1<br>1<br>1<br>1<br>1<br>1 |

www.Padasalai.Net



Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

**பகுதி–IV அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 3×6=18**

| | | |
|---|---|---|
| 44<br>(அ) | **மதீனா நகரம் ஒரு வளமான நகரம்**<br>**மாளிகை நகரம்**<br>➢ மேருமலையினைப் போன்று மதீனா நகரின் மேன்மாடங்கள் உயர்ந்திருந்தன.<br>➢ அங்காடிகள் நிறைந்த தெருக்களில் எழுந்த ஒலி, பெருங்கடலொலி போன்று இருந்தது.<br>➢ மதீனா நகரின் வீதிகள் பேரண்டத்தைப் போன்று பரந்திருந்தன.<br>➢ சிறிதும் இடைவெளியின்றி மாளிகைகள் நெருக்கமாக அமைந்திருந்தன.<br>**கொடை நகரம்**<br>➢ பழைமையான மதீனா நகரம், கலைஞர்களும் மறையவர்களும் நினைக்கின்ற பொருள் வளத்தைக் கொண்டது.<br>➢ அங்கு எந்தப் பொருளும் இல்லையென்று சொல்வதற்கு இல்லை.<br>➢ அப்படிக் கேட்போர்க்கும் அப்பொருளை எல்லாம் வாரி வழங்கும் வள்ளன்மை கொண்டவர்கள் உண்டு.<br>➢ அவ்வள்ளல்களை விடக் குறையாத பெரும் புகழைப் பெற்றது மதீனா நகரம்<br>**பொன்னகரம்**<br>➢ கட்டப்பட்ட தோரணங்களும் கொடிகளும் காடுபோல நெருங்கியிருந்தன.<br>➢ மலைபோன்ற யானைகள் அவ்விடத்தில் நிறைந்திருந்தன.<br>➢ இவற்றால் முழுமை பெற்ற பூமியைப்போல மதீனா நகரம் பொன்னெனப் பொலிந்தது. | 6 |
| | **மனைநகரம்**<br>➢ மதீனா நகரத்தில் வெண்சுண்ணச் சாந்தினைக் கொண்ட மாளிகைகள் ஒளிர்ந்தன.<br>➢ வீதிகளில் புதிய பூக்கள் சிந்திக் கிடந்தன.<br>➢ ஒவ்வொருவரையும் அழைத்துக் கொடுக்கும் விருந்தானது இனிமையுடன் இருந்தது.<br>➢ இதனால் அந்நகர் திருமண வீட்டைப் போன்று பொலிவுடன் காட்சியளித்தது.<br>**மாநகரம்**<br>➢ பகை, வறுமை, நோய் முதலியவை மதீனா நகரிலிருந்து ஓடிவிட்டன.<br>➢ குறைவில்லாத மானுட அறத்தை உடைய செங்கோல் ஆட்சி நடத்திப் பெரும்புகழ் பெற்ற சிறந்த அரசைப் போலப் பொலிவுடன் இருந்தது.<br>**ஒண்ணகரம்**<br>➢ அலைகடலானது முத்தையும் பல்வேறு அணிகளையும் சிதறுவது போல மதீனா நகரில் மக்கள் பல்வேறு மொழிகளைப் பேசுகின்றனர். | |

www.Padasalai.Net


Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

| | | |
|---|---|---|
| | ➢ தேன் அருந்தியவர்கள் மயங்குவது போலப் பலவாறான பொருள் வளத்தால் ஒளி பெற்றுத் திகழ்கிறது.<br>**செம்மை நகரம்**<br>➢ மதீனா நகரில் தானம், ஒழுக்கம், தவம், ஈகை, மானம் முதலியன பூத்திருந்தன.<br>➢ திண்ணிய வலிமை நல்கும் வெற்றி, அவ்வெற்றியைத் தருகின்ற குறைவற்ற ஊக்கம் காய்த்திருந்தன.<br>➢ தீன் எனும் செல்வம் பழுத்திருந்தது.<br>**(எவையேனும் ஆறு கருத்துகள் எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)**<br>**(அல்லது)** | |
| 44 (ஆ) | **அடக்கமுடைமை**<br>➢ நேர்வழி மாறாது அடக்கமாய் இருப்பவனின் உயர்வு, மலையின் மாண்பைக் காட்டிலும் பெரியது.<br>➢ ஒருவர் எதைக் காக்காவிட்டாலும் நாவைக் காக்க வேண்டும். அவ்வாறு காக்காவிட்டால் சொற்குற்றத்தில் சிக்கித் துன்பப்படுவர்.<br>➢ தீயினால் சுட்ட புண்ணால் உடலில் வடு உண்டானாலும் ஆறிவிடும்; நாவினால் சுட்ட புண்ணால் உடலின் புறத்தே வடு உண்டாகாவிட்டாலும் உள்ளே ஆறாது.<br>**(திருக்குறளில் அடக்கமுடைமை அதிகாரத்தில் பிற கருத்துகள் எழுதியிருப்பினும் மதிப்பெண் வழங்கலாம்)** | 2<br>2<br>2 |
| 45 (அ) | **சுற்றுச்சூழலை வளப்படுத்துவது இயற்கை வேளாண்மையே**<br>➢ இயற்கை வேளாண்மை<br>➢ நம்மாழ்வார்<br>➢ மசானாபு ஃபுகோகா – ஐந்து வேளாண் மந்திரங்கள்<br>➢ இயற்கை பூச்சிக்கொல்லி<br>➢ இயற்கை உரம்<br>➢ வேதிப்பூச்சிக்கொல்லிகளினால் ஏற்படும் விளைவுகள்<br>➢ இயற்கை வேளாண்மையின் நன்மைகள்<br>**(இதுபோன்ற இயற்கை வேளாண்மை தொடர்பான மேடைப் பேச்சிற்கான உரையை எழுதியிருப்பின் உரிய மதிப்பெண் வழங்கலாம்)**<br>**(அல்லது)** | 6 |
| 45 (ஆ) | **காற்றில் கலந்த பேரோசை**<br>**மேடையில் வாழ்ந்த மனிதர்**<br>➢ ஜீவா மிகச்சிறந்த மேடைப் பேச்சாளர்<br>➢ தம் கருத்துகளை நயமாகவும், கேட்போர் விரும்பும் வண்ணமும் பேசுபவர்.<br>➢ சிந்தாந்தக் கருத்துகளை தன் திறமையால், கலை நோக்கால் உயிர்பெறச் செய்தவர்.<br>**ஜீவாவின் கனவு**<br>மனித குலத்திற்குத் தலைமை ஏற்று அதிஉன்னதமான எதிர்காலத்திற்கு அழைத்துச் செல்ல வேண்டும். | 6 |

www.Padasalai.Net



Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

| | | |
|---|---|---|
| | **கொள்கையும் நம்பிக்கையும்**<br>மனித ஜாதியை உயர்ந்த இடத்திற்கு அழைத்துச் செல்வேன். என்னைப் பயன்படுத்திக்கொள். என்னைப் பயன்படுத்திக்கொள்வதே நீ எனக்குத் தரும் கைமாறு.<br>**பேச்சுநடை**<br>➢ பேச்சுக்கலை, அவர் பெற்ற வரம்.<br>➢ அவர் பேசுகையில் வெளிப்படும் உத்திகளும் பேச்சை அமைக்கும் அழகும் வெகுநூதனமாகவும் நளினமாகவும் இருக்கும்.<br>➢ அவருடைய பாணி இரவல்பாணி அல்ல; கற்று அறிந்ததும் அல்ல.<br>➢ விஷயத்தைக் கலைநோக்கோடு அணுகிக் கற்பனையும் கலந்து அமைத்துக் கொண்ட பாணி.<br>➢ வாண வேடிக்கைக்காரன் "நாழிக்குள் திணிக்கும் மருந்துபோல்" இரண்டு கைப்பிடி விசயம் மட்டும் எடுத்துக் கொள்வார்.<br>**பசுமையான எண்ணங்கள்**<br>'நான் ஒரு பள்ளி மாணவன், படித்துக் கொண்டிருக்கிறேன், படித்துக் கொண்டே இருப்பேன்' என்ற எண்ணம் அவர் மனதில் பசுமையாக இருந்தது.<br>**காற்றில் கலந்த பேரோசை**<br>➢ என் வாழ்வு என் கைகளில் என்று நம்பியவர்.<br>➢ கடவுளின் 'முன்னேற்பாடுகளை' முடிந்த மட்டும் அவர் தகர்த்து எறிந்துவிட்டார்.<br>➢ நீரில் விழுந்த கிளை மலைக்குச் சென்றுவிட்டது. எனினும் மரணம் இன்னும் கடவுளுக்குத்தான் சொந்தம்.<br>➢ ஜீவாவின் பேரோசை காற்றில் கலந்து விட்டது.<br>**(பொருத்தமான ஆறு கருத்துகள் எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)** | |
| 46 (அ) | **பாரதியின் இதழாளர் முகம்**<br>➢ பாரதியின் உலகளாவிய பார்வை கூர்மைப்பட இதழியல் பணியே தூண்டுகோல்.<br>➢ சுதேசமித்திரன், சக்கரவர்த்தினி, இந்தியா, பாலபாரதி அல்லது யங்இந்தியா, விஜயா, சூர்யோதயம், கர்மயோகி ஆகிய பல இதழ்களில் ஆசிரியராகவும் துணை ஆசிரியராகவும் பங்காற்றியுள்ளார்.<br>➢ 'தான்' என்ற ஒன்றை ஒழித்தவர் பாரதி.<br>➢ ஷெல்லிதாசன், காளிதாசன், சக்திதாசன், காசி, செல்லம்மா எனப் பல புனைபெயர்களில் எழுதியுள்ளார்.<br>➢ தமிழ் இதழியல் துறையில் முதன்முதலாகக் கருத்துப்படங்களை அறிமுகப்படுத்தியவர். தம் இதழ்களில் தமிழ்மாதம், ஆண்டு குறிப்பிடும் முறையைக் கையாண்டார்.<br>➢ செய்திகளுக்கு ஆங்கிலத்தில் தலைப்பு எழுதிக் கீழே தமிழில் தலைப்பிட்டார் (மகுடமிடல்). பிறகு ஆங்கிலத்தில் தலைப்பிடுபவரைச் சுதேசமித்திரனில் சாடினார்.<br>➢ பெண் விடுதலைக்குப் பாடுபட்ட பாரதி பெண்களுக்காகத் தமது சக்கரவர்த்தினி இதழில் குறள்வெண்பா எழுதினார். | 6 |

www.Padasalai.Net



Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

| | | |
|---|---|---|
| | ➢ பாரதி "இந்தியா" இதழை சிவப்பு வண்ணத்தாளில் வெளியிட்டார். சிவப்பு வண்ணம் புரட்சியையும் விடுதலையையும் குறிப்பதால், அடிமைத்தளையில் இருந்து இந்தியாவை விடுவிக்க வேண்டும் என்ற எண்ணம் பாரதியின் இந்தியா இதழிலும் வெளிப்பட்டது.<br>➢ எந்த நெருக்கடியான தருணத்திலும் பாரதி தம் இதழியல் பணியைக் கைவிடவில்லை.<br>**(பொருத்தமான ஆறு கருத்துகள் எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)**<br>**(அல்லது)** | |
| 46 (ஆ) | **பிம்பம் – கதை**<br>➢ **முன்னுரை**<br>➢ **உட்தலைப்புகள்**<br>➢ **முடிவுரை** | 1<br>4<br>1 |

<u>பகுதி–V</u>

**அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக. 4+2 = 6**

| | | |
|---|---|---|
| 47 (அ) | **அம்ம வாழி.... எனத் தொடங்கும் குறுந்தொகைப் பாடல்**<br>அம்ம வாழி தோழி நம்மூர்ப்<br>பிரிந்தோர்ப் புணர்ப்போர் இருந்தனர் கொல்லோ<br>தண்டுடைக் கையர் வெண்டலைச் சிதவலர்<br>நன்றுநன் றென்னும் மாக்களோடு<br>இன்றுபெரிது என்னும் ஆங்கண தவையே.<br>– வெள்ளிவீதியார் | 4 |
| 47 (ஆ) | **செயல் – என முடியும் குறள்**<br>வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்<br>துணைவலியும் தூக்கிச் **செயல்.**<br>**(அல்லது)**<br>நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்<br>வாய்நாடி வாய்ப்பச் **செயல்.**<br>**(இவற்றுள் ஏதேனும் ஒரு குறள் எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்கலாம்)** | 2 |

www.Padasalai.Net


Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com